1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) மீட்டர்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் முத்திரை இருக்கும். இந்த முத்திரையை ஏதாவது ஒரு விதத்தில் ஒருவர் உடைத்தாலோ அல்லது கிழித்தாலோ அவர் விதிகளை மீறியுள்ளதாகக் கருதப்படுகிறது. போக்குவரத்துத் துறையின் நேரிடப் பணியாளர்கள் திடீரென்றும், அடிக்கடியும் சோதனைகளை நடத்தி வருகின்றனர். 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை உள்ள கால அளவில், மீட்டர்களில் உள்ள முத்திரைகளை உடைத்தது குறித்தும், பயணிகளிடமிருந்து கூடுதல் கட்டணங்களை வசூலித்ததற்காகவும் 110 உரிமதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு சற்றுத் தொடர்பு இல்லை என்றாலும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்குவதன் காரணமாக மாயூரம், கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் இதற்கு முன்னால் இத்தகைய வாகனத் தொழில் புரிந்து வந்த குதிரை வண்டிக்காரர்களும், மாட்டு வண்டிக்காரர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து அடிக்கடி அரசுக்கு அவர்கள் மனுக்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆட்டோ ரிக்ஷா போன்றவற்றுக்கு உரிமம் வழங்கும்போது மாட்டு வண்டி, குதிரை வண்டிக்காரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உரிமம் வழங்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்த நல்ல யோசனை பரிசீலிக்கப்படும்.

கோவை அருகே மாற்றுப் பாதை.

* வினா 458— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரத்தின் வழியாகக் கேரளாவிற்குச் செல்லும் வாகனங்களின் மூலம் ஏற்படும் நெரிசலைக் குறைக்க தேசிய நெடுஞ்சாலை எண். 47-ல் கோவைக்கு அருகில் பைபாஸ் ரோடு அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) ஆம். முதல் கட்டமாகிய நிலம் ஆர்ஜிதம் செய்ய ரூ. 36,42,500 பொறுமான மதிப்பீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி செயலில் உள்ளது.

தரமான சாலை அமைப்புப் பணியை உடனடியாக ஏற்க, மத்திய அரசின் அனுமதியும், நிதி ஒதுக்கீடும் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : நெடுஞ்சாலை எண் 47-ல் கோவை—சென்னியம்பாளையம், இருகூர்—மதுக்கரை வழியாக எட்டிமலை வரை ஓடும் இந்த ரோடிற்கான வேலையைத் துரிதமாக எடுத்து முடிக்க இந்த அரசு உடனடியான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரை நில ஆர்ஜிதப் பணிக்காக ரூ. 36,42,500 செலவிட்டு இந்தப் பணி துவங்கப்பட்டது. மேற்கொண்டு வேலைகள் 2 மேம்பாலங்கள், ஆற்றின் குறுக்கே ஒரு பாலம், மேற்கொண்டு 7 சிறிய பாலங்கள் போட வேண்டிய பணி முதற்கொண்டு, மற்ற பணிகளுக்காக இரண்டு கோடிக்கு மேற்பட்ட பணம் தேவைப்படுகிறது. மத்திய அரசு நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்துள்ளது. எனவே, மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள்.

* வினா 459—திரு. எஸ். கணேசன், திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் எத்தனை ? அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாநிலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள 3 நூற்பாலைகள் நிதி நெருக்கடி காரணமாகவும் வேறு காரணங்களுக்காகவும் இயங்கவில்லை.

1. பத்மா ஆலை, கோயம்புத்தூர்.

2. தமிழ்நாடு நூற்பாலை, கோயம்புத்தூர்.

3. ராஜா ஆலை, மதுரை.